(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 17.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஏப்ரல் 25, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1320/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எலஹெர – கிரித்தலய சரணாலயத்தின் பரப்பளவு, ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி சரணாலயத்திற்குச் சொந்தமான சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் பாரிய சூழல் அழிவு ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1326/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு இலங்கையில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) 2020/2021 பெரும் போகத்தில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி போகத்தில் பயிர்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு சோள விதைகளின் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iv) ஒரு கிலோகிராம் உள்நாட்டு சோள விதையின் விலை மற்றும் ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட சோள விதையின் விலை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு ஏக்கரில் சோளப் பயிர் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான விதைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி விதைகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1457/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் இலத்திரனியல் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு, நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1503/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பின்னவல மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி மிருகக்காட்சிசாலைக்கு எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1539/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீட்டுப் பணிப்பெண்களாக வருடாந்தம் வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) இவ்வாறு வெளிநாடு செல்லும்போது சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி சேவை ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலம் யாதென்பதையும்;

(iv) மேற்படி வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பின்னாய்வு மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1575/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை, பூநகரி, சியம்பலாண்டுவை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் சூரியசக்தி பூங்காக்கள் இன்றளவில் அமைக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவிலிருந்தும் தேசிய மின்சக்தி முறைமைக்கு வழங்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை மெகாவாட்களில் வெவ்வேறாக யாது;

(iii) மேற்குறிப்பிட்ட சூரியசக்தி பூங்காக்கள் இன்றளவில் நடைமுறைப்படுத்தப் படவில்லையெனில், அவ் ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவினதும் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவினதும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1616/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996ஆம் ஆண்டு 947/13ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள முத்துராஜவல சரணாலயத்தின் எல்லைகள் இதுவரையிலும் அடையாளமிடப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குள் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளின் அளவினை தனித்தனியே இனங்காண்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவானது ஹெக்டேர்களில் தனித் தனியே யாதென்பதையும்;

(ii) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள காணிகளின் அளவுகளுக்கு இடையில் வேறுபாடு காணப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1630/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கு பட்டதாரிகளை மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் போது அவர்களின் ஆங்கில மொழி அறிவு, விளையாட்டுத் திறமைகள் மற்றும் அழகியற்கலை ஆற்றல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழில்சார் அடிப்படைக் கல்வி முறையொன்றுக்காக பாடத்திட்டங்களைத் திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி கல்வியை வழங்குவதன் பொருட்டு தொழில்பயிற்சி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) கல்வி மறுசீரமைப்புகள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை ஆராய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1632/2023

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மண்சரிவு காரணமாக மலைநாட்டுப் புகையிரதப் பாதைகளில் புகையிரதப் போக்குவரத்துக்கு நிதமும் இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதையும்;

(ii) அதனால் ஏற்படுகின்ற தாமதங்கள் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டுப் பயணிகள் ஆகிய இரு தரப்பினரும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பாதைகளை புனரமைப்பதற்காக இராணுவச் சிப்பாய்களையும் புகையிரத ஊழியர்களையும் ஈடுபடுத்துவது செயற்றிறனற்றது என்பதையும்;

(iv) உலகின் ஏனைய நாடுகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் அறிவினைப் பயன்படுத்தி புகையிரதப் பாதைகளில் மண்ணை அகற்றுவதற்கான பெக்கோ இயந்திரமொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1635/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் 2022.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் அனுப்பப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்பப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) தற்போது இலங்கைக்குக் கிடைத்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு கோட்டா ஒவ்வொரு நாட்டின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(v) வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள இலங்கையர்களுக்காக இயங்கிவருகின்ற மொழிப் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளியும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறுவதற்கும்; அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவிக்கானதும் பாதுகாப்புத் தொடர்பானதுமான தோதான சர்வதேச மரபுகளுக்கும், நியமங்களுக்கும், மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் பயன்கொடுப்பதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு அத்துடன் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியம் என்பவற்றைத் தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 26 ஆம் திகதி புதன் கிழமை, 27 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார அவர்கள் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

4.

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஆச்சார்ய பூஜ்ய ஹாரிஸ்பட்டுவே அரியவங்ஷாலங்கார மாஹிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 30 ஆம் திகதிய 2317/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*2.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*3.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(c) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை போக்குவரத்துச் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.02.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

கமத்தொழில் அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*5.

கமத்தொழில் அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.09.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

கமத்தொழில் அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 253 ஆம் அத்தியாயத்தின் கீழ் 2022.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலைச் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— பனை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2016),— 1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 2022.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பனை அபிவிருத்திச் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— பனை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2017),— 1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 2022.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பனை அபிவிருத்திச் சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை அணுசக்தி சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை அணுசக்திச் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

14.

களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/76 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6(3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2இ, 5 மற்றும் 5அ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2292/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

27.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.